ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

தரணியார்யாவரும்தேடுவதும், தேடவிரும்புவதும்தனமே. எந்தக்காரியமும் தனமின்றி ஸாதிக்க முடியாதபடியால் அதனை விரும்பாதார் யாரும் இல்லை. ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ சரீரபோஷணாதிகளுக்குபயோகப்படுவதே தனமாகும். அன்னபானாதிகள் சரீரபோஷணத்தின் பொருட்டு ஸாக்ஷாத்தாக உபயோகப்படுகின்றன. காய், கனிகள், தான்னியவர்க்கங்கள் அன்னமாகப் பரிணமித்து உபயோகப்படுகின்றன. இரத்தினம், ஸுவர்ணம், வெள்ளிமுதலிய லோகவர்க்கங்கள் நாணயங்களாகப் பரிணமித்து தான்னியாதியாக மாற்றப்பட்டு உபயோகப்படுகின்றன. இவற்றுள் அன்னபானாதிகளை அந்தந்த வேளையிற்றான் உபயோகிக்கலாம். அடுத்தவேளையில் வைத்திருந்தால் கெட்டுப்போய்விடும். சிற்சில காய் கனி வர்க்கங்கள் இரண்டுமூன்று தினங்களில், அதற்குமேலும் சிலநாளில் வைத்திருக்கலாம். ஆகவே அன்னாதிகளைவிட அதிகநாள் வைத்துக் கொண்டு உபயோகப்படுத்தக் கூடியதாயிருப்பதால் காய் கனிகள் அதிகமாக விரும்பப்படுகின்றன. அவைகளை விட தான்னியவர்க்கங்கள் இரண்டு மூன்று வருஷங்களாக வைத்துக்கொண்டிருக்கக் கூடியவையாதலால் விசேஷமாகக் கருதப்படுகின்றன. பல்லாண்டுகளானாலும் விகாரப்படாமலிருப்பதால் பவுன் ரூபாய் முதலியவைகள் தான்யாதிகளைவிட அதிகமாக மதிக்கப்படுகின்றன. அவைகளும் கைக்குக்கை மாற்றப்பட்டு சலித்துக்கொண்டிருப்பதால் சலிக்காமல் ஸ்திரமாயிருக்கும் பூமி அவைகளைவிட சாசுவதமாக நினைக்கப்படுகின்றது. அதுவும் பெரிய காரியங்களை உத்தேசித்து கைமாற்றப்படுவதாலும், ஒருக்கால் கைமாற்றப்படாவிடினும் இவ்வுலகைவிட்டு வேறு உலகம் செல்லுகையில் கொண்டுபோகக் கூடியதாயில்லாதபடியாலும், எவ்வுலகத்திலும் தொடர்ந்து வரக்கூடிய தான தர்மமே எல்லா தனங்களைக்காட்டிலும் மிகச்சிறந்ததாக நமது சாஸ்திரங்களில் புகழப்படுகின்றது. மன்னுவாதி மஹரிஷிகளும் அந்த தர்மத்தைத்தான் பிரதானமாக அனுஷ்டிக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அவ்வாறு அவர்கள் கூறியிருப்பது நமது சிரேயஸ்ஸுக்காகவேயன்றி அவர்களது சொந்தப்பிரயோஜனத்தை உத்தேசித்தல்ல. அப்படியிருக்கையில் தற்காலத்திய சிலர் இவ்வுண்மையைத் தெரிந்துகொள்ளாமல்நம்முன்னோர்கள் சுயநலத்தையே பிரதானமாகப்பாராட்டி என்னென்னவோ கட்டுப்பாடுகளைக் கற்பித்து உலகத்தைக் கெடுத்துவிட்டதாகக் கூறிவருகிறார்கள். இதன் உண்மை சாஸ்திர ஆராய்ச்சி செய்தவர்களின் பழக்கமிருப்பவர்களுக்கு நன்றாய் தெரிந்திருக்கும். ஆதலால் சாசுவதமான தர்மத்தையே ஆதரித்து யாவரும் சிரேயஸ்ஸை அடைவாராக. சுபம்!

பத்திராதிபர்,

உ

ஆர்ய தர்மம்.

பிரமோதூத-௵ சித்திரை-மீ ௫௨

தேவபாஷை.

தனதான்னியாதி ஸம்பத்து எவ்வளவிருப்பினும், அது தற்காலம்பெற்ற தேகத்திற்கு யாதொரு கெடுதியும் செய்யாமல் அனுகூலமாய் ஆகும்படி உபயோகப்படுத்த புத்தியே பிரதானமாயிருக்கவேண்டும். புத்தியின் தவறுதலாற்றான் நம்முடைய ஹிதத்திற்காகவென்றே ஏற்பட்டுள்ள பதார்த்தங்களிலிருந்து வேண்டாத வியாதிகளை அடைகிறார்கள். இக்கருத்தையே வாக்படாசாரியார்—

“ प्रायः प्रज्ञापराधेन रोगग्रामः प्रजायते ”

“பெரும்பாலும் புத்தியின் அபராதத்தாற்றான் ரோகக்கூட்டமுண்டாகின்றது” என்று கூறுகின்றார். புத்தியில்லாதவன் பணக்காரனாயினும், பெரியவனாக நினைக்கப்படமாட்டான். புத்தி ஒருவனுக்கு ஸ்வாதீனப்படாமல் பைத்தியம் பிடித்திருந்தால் அவனை யாராவது லக்ஷியம் செய்கிறார்களா? அந்த புத்தியை பெரியோர்களது பழக்கத்தினாலும், ஒழுக்கத்தினாலும், சீர்படுத்திக்கொள்ள வேண்டும். அதுவும் பால்யம் முதற்கொண்டே இருந்தாற்றான் பயன்படும். இளமைப்பருவத்தில் சீர்திருத்திக்கொண்டுவராமல் வேறு வழிகளில் பழக்கிவிட்டால் முதிர்ந்த வயதில் அவ்வழியிலேயே நாடுமேயன்றி நல்வழியில் நாடமாட்டாது. அதனால்தான் பால்யத்திலேயேபடிக்கப்போகிறார்கள். சரீரத்திற்கு நல்ல ஆஹாரவிஹாரம்போல் புத்தியைச் சீர்படுத்த படிப்பே பிரதானமானது. பால்யத்தில் படிப்பேறாவிடில் பின்னிட்டு பாடுபட்டாலுமுபயோகப்படாது. மற்ற தேசபாஷை முதலியவற்றைப்படிப்பதைவிட தேவபாஷையைப்படிப்பதே மேலானதென்று புத்திமான்கள் தீர்மானித்த விஷயம். நமது ஆர்யச்சிறுவர்களுக்கு ஆதியில் வித்தியாரம்பம் செய்யும்பொழுது பஞ்சாக்ஷரீ, அஷ்டாக்ஷரீ முதலிய

தேவபாஷையையே கற்பித்தாலும் தற்காலத்திய நாகரீகத்தால் வித்தியாரம்பம் செய்த மறுதினம் முதற்கொண்டே வேறுபாஷையைக் கற்பிக்க முயற்சிக்கிறார்கள். அதோடு தேவபாஷையிலும் தினந்தோறும் அரைமணியாவது கற்பிக்க ஏற்பாடு செய்வதில்லை. பால்யம் பூறாவும் வேறு பாஷைகளில் சிரமப்பட்டுவிட்டு தேவ பாஷைக்குரிய எழுத்தையே சிலர் தெரிந்துகொள்ளவில்லை. இவர்களது கூட்டம்தான் பெரும்பாலும் தேசஸேவைபுரிய தற்காலத்தில் முன்வந்து நிற்கின்றது. தேசியமான விஷயத்தில் எப்படி வேண்டுமோ அப்படி ஆய்விடட்டுமென்றாலும், அவர்களே தர்ம மார்க்கத்திலும் தலையிட ஆரம்பித்துவிட்டார்கள். தர்மசாஸ்திரம் பூராவும்தேவபாஷையில்இயற்றப்பட்டிருக்கின்றன. ஆனால்தற்காலத்தில் அவைகளின்மொழிபெயர்ப்புபலபாஷைகளிலும்பிரசுரமாய் இருக்கின்றது. ஆயினும் ஸாக்ஷாத்தாக தேவபாஷையிலிருந்து தர்மதத்துவம் விளங்குவதுபோல் மற்ற மொழிபெயர்ப்புகளில் விளங்கமாட்டாது. ஆகையால் தர்மதத்துவம் விளங்கவேண்டுமானால் பால்யம் முதற்கொண்டே குருவிடமிருந்து தேவபாஷையையும் அதிலுள்ள அறநூல்களையும் மீமாம்ஸா நியாயவிசாரத்துடன் கற்றுக்கொள்ளவேண்டும். அவைகளைக் கற்பிப்பவர்கள் நம் பாதநாட்டில் இன்றும் குறைந்துபோகவில்லை. ஆகவே தர்ம சிரத்தையுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பால்யம் முதற்கொண்டே தேவபாஷையைப் படிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். மற்ற பாஷைப் படிப்பில்போல் இதில் பணச் சிலவில்லை. அதோடு மாத்திரமில்லை. அதனைப் படிக்கவரும் குழந்தைகளுக்குத் தார்மிகர்கள் தர்மபாடசாலை வைத்து அன்ன பானாதிகளுக்கும் வேண்டிய ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்கள். உபாத்தியாயர்களையும் வைத்திருக்கிறார்கள். ஆகையால் ஏழைகளாவது தங்கள் குழந்தைகளை வீணான சிரமப்பட்டு வேறு பாஷைகளைப் படிக்க அனுப்பாமல் தேவபாஷையாகிய ஸம்ஸ்கிருதத்தையே படிக்க அனுப்பி தர்மசாஸ்திரம் வேரறுதலற்றுப் போகாமல் காப்பாற்றி வருவார்களாக. சுபம்!

பத்திராதிபர்.

வரருசி.

(102-வது பக்கத்தொடர்ச்சி.)

நீராடாமல் இருக்கிற உன்னை எங்களது யஜமானியாளவள் தொடமாட்டாள் என்று சேடிகளால் ஆதரவோடு சொல்லப் பட்ட அவன் அப்படியே என்று ஒப்புக்கொண்டு, அவர்களோடு கூட உள்ளே நுழைந்தவனுப் இருள்மூண்ட உட்கட்டிடத்தில் ரகசியமாய் வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் வரவழைத்து கட் ஜலத்தால் அழுக்கடைந்ததும் அவர்களால் கொடுக்கப்பட்டது மான சிறுதுண்டை உடுத்துக்கொண்டு நகம்முதற்கொண்டு சிகை வரையில் எண்ணைதேய்க்கும் வியாஜத்தால் அவர்களால் கொடுக்க பட்ட எண்ணைக்கசடை சரீரத்தில் பூசிக்கொண்டு தன்னை பாக்ய சாலியாக எண்ணிக்கொண்டான். இவ்விதம் எண்ணை தேய்த்துக் கொள்ளும் சுகத்தை இருட்டில் அநுபவித்துக்கொண்டு அநேக மனோபீஷ்டங்களை எண்ணிக்கொண்டு முதல்யாமம் சென்றதையும் நினைக்கவில்லை. இரண்டாவது யாமத்தில் உபாத்தியாயர் வந்த தைக்கண்டு பாபரப்படைந்து அந்த சேடிகள் "வாருசிக்குத்தோழ னை இவ்வுபாத்தியாயர் முன்பு அறிவிக்காமலே இங்கு வந்து விட்டார். என்செய்வோம்! இங்கு முகூர்த்தகோம் மறைந்திரு" என்று சொல்லிக்கொண்டு பெட்டியில் அவனைப்போட்டு அப் பெட்டியை வெளியில் தாளிட்டார்கள். அப்படியே புரோஹித னும் அவர்களால் எமாற்றப்பட்டு நீராடும் வியாஜத்தால் அழைக் கப்பட்டவனுப் இருட்டில் கட்ஜலத்தால் தேய்க்கப்பட்டு சேனைத் தலைவன் வரும் ஸமயத்தில் பெட்டியில் முதல்வனைப்போல் போடப்பட்டான். இவனும் கஜ்ஜலத்தால் தேய்க்கப்பட்டு உத் ஸாஹப்படுத்தப்பட்டு வியாபாரி வந்ததும் அதே பெட்டியில் பிர வேசிக்கச் செய்யப்பட்டான். கேடுகெட்ட இம்மூவரும் அந்ததா மிஸ்ரம் (अन्धतामिस्र) என்ற நாகத்தில் வாஸத்தை அநுபவிக் கின்றவைகள்போல பெட்டியில் ஒருவரோடொருவர் மேலே பட் டாலும் பயத்தாலும் அச்சத்தாலும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. தனது சரீரத்தையும் பாக்கியத்தையும் நிந்தித்துக் கொண்டு முகத்தைக் குனிந்துகொண்டவளான அந்த பதிவிரதா மணியான உபகோசையை சேடிமார்கள் செட்டியாரைப் பணங்

கேட்கச்சொன்னபோது சிரமப்பட்டுத் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு அவள் முன்பு நிற்கும் செட்டியாரைப்பார்த்து "என் கணவனால் உம்மிடம் கொடுக்கப்பட்ட பணத்தைக்கொடு" என்று யாசித்தாள். "அப்படியே கொடுப்பேன்" என்று அந்த துஷ்டன் பதிலுரைக்கும்போது அவள் பெட்டியைக் கேட்கச்செய்து கொண்டு ஓ வீட்டு தெய்வங்களே! இந்த ஹிரண்யகுப்தனின் வார்த்தையைக் கேளுங்கள் என்று சொன்னாள்.

பிறகு வியாபாரி அப்யங்கஸ்நானஞ்செய்தான் இரவு அனேகமாய் வெடிந்துவிட்டது. 'கேடுகெட்டவனே! உனது வீடுபோய்ச்சேரு' என்று சேடிமார்களால் கழுத்தில் கைகொடுத்துத் தள்ளப்பட்டும் ஒரே துணியை உடுத்திக்கொண்டபடியே மெய்யால் பூசப்பட்டவனுமான அந்த வியாபாரி அடிதோறும் நாய்களால் வெரட்டப்பட்டு வெட்கமடைந்து தனது வீடுசேர்ந்தான். தனது வேலைக்காரர்களைக்கொண்டு எவ்வளவு பிரயாஸப்பட்டும் அஞ்சனத்தைப் போக்கமுடியாமல் எதிரே நிற்கவும் முடியாதவனானான்.

பிறகு சேடிகளால் பின்தொடரப்பட்டுச்சென்ற பதிவிரதாமணியான உபகோசை நந்தராஜனின் அரண்மனையையடைந்து "ராஜனே! ஹிரண்யகுப்தன் என்ற செட்டியார் என் கணவனால் பத்திரப்படுத்திவைக்கும்படி கொடுத்திருந்த பொருளை அபகரிக்க விரும்புகிறார் என்று விக்ஞாபித்துக்கொண்டாள். அம்மஹாராஜனும் உடனேயே அழைத்துவரப்பட்ட அவன் இவனுடைய பணம் என்கையில் சிறிதுகூட இல்லை என்றுசபதம் பண்ணினான். அப்போது உபவர்ஷரின் பெண் 'மஹாராஜனே! பெட்டியில் எனது கணவனால் வைக்கப்பட்டிருக்கின்ற வீட்டுதெய்வங்களே இவ்விஷயத்தில் ஸாக்ஷிகள். அவர்களின்முன்பு இவனால் தனது வாக்காலேயே நியாஸமாக (न्यास) வைக்கப்பட்ட பொருள் உண்மைதானென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகையால் விசாரிக்கப்படவேண்டும் என்று வேண்டினாள்.

ஆச்சர்யப்பட்ட அரசன் வேலையாட்களால் அப்பெட்டியைக் கொண்டுவாச்செய்து எவ்வளவுக்குள் சபையில் போடச்செய்தானோ அவ்வளவுக்குள் உபகோசை 'ஓ தெய்வங்களே! இவரால் எது உரைக்கப்பட்டதோ அந்த உண்மையைச் சொல்லுங்கள்.

பிறகு தனது வீடுபோய்ச்சேருங்கள் என்று உரக்கச்சொன்னாள். சபையில் தங்களது ரஹஸ்யம் வெளிபாய்விடுமோ என்று பயத்தால் அவர்கள் மிகவும் நடுங்கி உண்மைதான், எங்கள் முன்னிலையில், இவளால் அப்பொருள் ஒப்புக்கொள்ளப்பட்டது என்று சொல்லினர். பிறகு பதிலுரைக்காமல் தயங்குகின்ற வியாபாரியால் நியாஸமாகக் கொடுக்கப்பட்ட பொருள் யாவும் உண்மையெனவே முடிவில் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு அரசனால் பூஜிக்கப்பட்டு வேண்டப்பட்ட பதிவிரதை பெட்டியை சபையில் திறக்கச்செய்து அம்மூன்று கேடுகெட்ட புருஷர்களையும் இருட்டு பிண்டங்களைப்போல் வெளியில் வரச்செய்தாள். சிரமப்பட்டு மந்திரிகளால் கண்டுகொள்ளப்பட்ட அவர்கள் யாவரும் பரிஹாஸம் செய்யும் நிலைமையையடைந்தார்கள். இது என்ன என்று தர்மிஷ்டனான ராஜனால் கேட்கப்பட்ட அம்மாது நடந்த வரலாறு யாவற்றையும் ஸபையில் தெரியப்படுத்தினாள். 'சீலத்தால் ரக்ஷிக்கப்படுகின்ற குலப்பெண்களின் சரித்திரம் சிந்திக்கத்தகாதது' என்று சபையோர்யாவரும் மகிழ்ந்தனர். பிறர் மனைவியை விரும்பின துர்நடத்தையுள்ள அந்நான்கு தூர்த்தர்களும் கோபங்கொண்ட அரசனால் எல்லாப்பொருள்களையும் பறிமுதல் செய்து தேயத்திலிருந்து விரட்டப்பட்டு சண்டாளர்களாலும் அவமதிக்கப்பட்டு வெறுக்கக்கூடிய உயிர்களைத் துறந்தார்கள். உபகோசையும் தார்மிகனான அரசனால் மரியாதை செய்யப்பட்டும் சமாசாரமறிந்தவர் வர்ஷோபாத்யாயர் உபவர்ஷர் இவர்களால் கொண்டாடப்பட்டும் பட்டணத்து ஜனங்களால் பாதிவ்ரத்தியதெய்வம் இவளே என்று அர்ச்சிக்கப்பட்டும் புருஷனையே எப்போதும் சிந்தித்துக்கொண்டு ஜாக்கிரதையுடன் வீட்டினுள்ளேயே இருந்தாள்.

காலஞ்செல்கையில் பனிமலையில் கொடூரமாகத்தவம்புரிகின்ற வாருசி பரமேச்வரனின் பிரஸாதத்தையடைந்து ஸகலமான பாணினீயவியாகரணத்தைக் கசடறக்கற்றார். சிவபெருமானின் கட்டளையால் அதேசாஸ்திரம் இவரால் பூர்த்திசெய்யப்பட்டு ஸம்ஸ்கிருதம் என்று வழங்கலாயிற்று. இவ்விதம் சந்திரகலாதாரனின் பிரஸாதமாகிற அமிழ்தத்தால் நிறைந்தவனும் புதிதுபுதிதாகத் தோன்றும் ஸாஸ்வதிவிலாஸமுள்ளவருமான உபகோசாநாதனான வாருசி வழிநடையின் சிரமமறியாமலே சிறிதுநாட்களிலேயே பாடலீபுத்திரத்

திற்குத்திரும்பினன். தாயாராலும் குருக்களாலும் கொண்டாடப் பட்ட வாவையுடைய அவன் அவர்கள் சரணங்களில் வந்தனஞ் செய்தான். பின்பு உபகோசையின் அந்த ஆச்சர்யமான வாலாற்றையும் கேள்வியுற்று வெகுநோம் ஆச்சர்யப்பட்டு அவ்விதமான தர்மபத்தினியால் இல்வாழ்க்கையின் சிறப்பு சாலவும் போற்றத் தக்கது என்று எண்ணினன்.

பிறகு வாருசிமுகமாக வர்ஷோபாத்தியாயர் புதிய சப்தசாஸ்திரத்தைக்கேட்க விரும்பும்போது வர்ஷருக்கு சுப்பிரமணியபகவானே அவையாவற்றையும் அறிவித்தார். வியாடியும் இந்திரதத்தனும் வர்ஷோபாத்தியாயரிடமிருந்து பாணிநீயம் முதலான சாஸ்திரத்தை அறிந்தனர். பிறகு சந்தோஷங்கொண்ட வியாடியாலும் இந்திரதத்தனுலும் குருதக்ஷிணையைக்குறித்து விக்ஞாபிக்கப்பட்ட வர்ஷர் கோடி ஸுவர்ணம் கொடுக்கும்படி சொன்ஞர். அப்படியே தருகிறேமென்று உறுதிகொடுத்து அவர்கள் ஒருவருக்கொருவர் யோசனைசெய்து வாருசியையழைத்து இவ்விதம் சொல்லலானுர்கள். தோழனே! கோடிஸுவர்ணம் தக்ஷிணையாகத் தாவேண்டுமென்று நமது உபாத்தியாயரால் சொல்லப்பட்டது. இவ்வளவு ஸுவர்ணமும், நந்தராஜனைத்தவிர மற்றவரிடம் கிடைக்காது. அவனே 99கோடி ஸுவர்ணங்களுக்கு அதிபதி. முன்பே அவனுல் உன் மனைவி தர்மத்தால் ஸஹோதரியாகக் கருதப்பட்டிருக்கிறுள். ஆகையால் அந்த ராஜனைப் பிரார்த்தித்தால் உனது குணங்களுக்கு ஈடுபட்டு அவன் நிச்சயம் வேண்டிய காஞ்சனத்தைத் தருவான். அவனே இப்போது அயோத்தியில் வஸிக்கிறுன், வா அங்கேயே செல்வோம் என்று. பிறகு அம்மூவரும் அயோத்திமாநகரையடைந்தனர். அந்தோ! அவர்கள் வருந்தருணத்தில் நந்தராஜன் மேலுலகஞ் சேர்ந்தான். ராஜ்யத்தில் பெரிய கோலாஹலம் உண்டாயிற்று.

பிறகு அவர்கள் சிந்தையால் கலங்கி இன்னது செய்வது என்று புரியாமல் தயங்கும்போது அவர்களில் யோகஸித்தியுள்ள இந்திரதத்தன் சொன்னதாவது தோழர்களே! இப்போது எனக்கொரு உபாயம் தோன்றுகிறது. இறந்த நந்தராஜனின் சரீரத்தில் நான் யோகமஹிமையில் பிரவேசிக்கிறேன். வாருசி என்னிடம் வந்து ஸுவர்ணத்தை யாசிக்கட்டும். நான் திரும்பிவரும்

வரை என்சரீரம் இந்த சூன்யமான கோயிலில் வியாடியால் ரக்ஷிக்கப்படட்டும் என்று அவர்களும் சந்தோஷங்கொண்டு அந்த வார்த்தையை நல்லது நல்லது என்று அனுமோதித்தனர்.

பிறகு நந்தன் உயிர் துறந்ததும், எங்கும் ஹாஹாகாரம் ஏற்பட்டபோது, சகடாலன் முதலான மந்திரிகள் அந்தப்புரத்தில் நுழைந்து 'ஹா! கொல்லப்பட்டோம். அந்தோ! இது என்ன நேர்ந்தது நாங்கள் நாதனற்றவர்களானோம். ஸகல ஜனங்களையும் சந்தோஷப்படுத்துகிற நந்தனே, நீ இல்லாமல் இப்போது எங்கள் உயிர்களும் செல்கின்றன; பூதேவி விதவையானாள். பண்டிதர்களுக்கு, ஆசிரயம் இல்லாமற்போய்விட்டது; ஸரஸ்வதி தேவிக்கு ஆசிரயம், இல்லை. உலகங்களுக்கு சந்தோஷக் கொண்டாட்டம் நின்றுவிட்டது; துஷ்டர்கள் தடங்கலன்றிக் கிளம்பத் தலைப்பட்டனர்; நல்ல கதை அஸ்தமித்து விட்டது; உலகு ஜீர்ணமாகி விட்டது. என்று கதறுகிற பட்டமஹிஷிகளை சமாதானஞ்செய்து, காந்தி குன்றிய அரசனின் சரீரத்தைச் சூழ்ந்து, துக்கித்தனர். முக்கிய மந்திரியான சகடாலன், வருத்தத்தை ஸஹிக்க முடியாதவனாய், மஹாராஜனே? என் இவ்விதம் எங்களைக் கலக்கிவிட்டும், தவத்தால் பெற்ற குழந்தையான சந்திரகுப்தனையும் சத்ருக்களுக்கு இரையாக்கியும், அன்புள்ளவர்களும் உன்னையே சரணம் புகுந்தவர்களுமான மனைவிகளையும் பொருட்படுத்தாது, இம்மண்ணுலகை விட்டகன்றீர். என்று புலம்பிக்கொண்டே ஸாகூஷமமான பார்வையால் அரசனை வர்ணித்துக்கொண்டு, அவனது முகத்தில் சிறிது புஞ்சிரிப்பைக் கண்டு, இது என்ன? என்று பரபரப்படைந்து, அவனது தலையைத்தொட்டான். அப்போது' தூங்கி எழுந்தவன்போல நந்தன் கண்களைத் திறந்து, எதற்காக இந்தக்கோலாஹலம், நான் இறக்கவில்லை. இன்னும் நூறு வருடங்கள் பிழைத்திருப்பேன் என்று மெள்ள மெள்ளச் சொன்னான்.

குடிகளின்பாக்யத்தால் நந்தன் பிழைத்திருக்கிறான். யாரோ ஒரு ஸித்தபுருஷனால மஹாராஜன் உயிர்ப்பிக்கப்பட்டான், என்று எங்கும் ராஜபுருஷர்கள், சந்தோஷபரவசமாகவே, மந்திரிமார்களுஞ் சந்தோஷத்தால் கண்கள் மலர்ந்து பாக்கவே, அந்தப்புரஸ்திரீகளும் ஆனந்திக்கவே, பக்கத்து சேவகர்களும் பிரியத்தால் நேத்திரானந்தத்தை யநுபவிக்கவே, ஸ்துதிபாடகர்களும் ஜய(ஜய)

சப்தத்தால் முழங்கவே, வைத்தியர்களும் தன்வந்தரியால் கூறப்பட்ட தாதுக்களின் அறிவைக் கஷ்டப்பட்டுத் தெரிந்து கொண்டதை வீண் என்று எண்ணவே, பரபரப்போடு ஓடிவந்த வேத்திர பாணியான பிரதிஹாரியானவன் மஹாராஜனே ! பாடலீபுரத்திலிருந்து ஸகலகலாவல்லபரான வாருசியென்ற ஒரு பிராம்மணர் வெளியில் நிற்கிறார். தங்களைப் பார்க்க விரும்புகிறார், என்று விக்ஞாபிக்கவே, நந்தன் படுக்கையிலிருந்து எழுந்து, மங்களமுள்ளவனே ! தாமதியாமல் இவனை உள்ளே விடு என்று கட்டளையிட்டான்.

பிறகு கஞ்சுகிகளால் 'இங்கே இங்கே வரவேண்டும்' என்று உள்ளே அழைக்கப்பட்ட வாருசி 'மஹாராஜனே! நான் ஒரு காரியத்தை விரும்பி வந்திருக்கிறேன். தாங்கள் பிழைத்ததால் இந்த பெரியஉத்ஸவம் ஏற்படுகிறது. குருதக்ஷிணைக்காக இந்தசந்தோஷ ஸந்தர்ப்பத்தில் கோடிஸுவர்ணத்தைக் கொடுக்கும்படி செய்ய வேண்டும் என்று யாசித்தான். யோகநந்தனும் அப்படியே தருகிறேன் என்று சொல்லிவிட்டு சகடாலன் என்ற முதல் மந்திரியைப்பார்த்து 'இந்த பிராம்மணருக்கு கோடி ஸுவர்ணங் கொடு' என்று ஆக்ஞாபித்தான்.

புத்திசாலியான மந்திரியோவெனில் 'அரசனே கொடுக்கிறேன்' என்று சொல்லிவிட்டு, "இது விசித்திரமாயிருக்கிறது. இறந்த இவன் மறுபடியும் பிழைத்திருக்கிறான், யாசகனும் இப்போதே வந்து சேர்ந்தான். கோடி ஸுவர்ணத்தையும் யாசிக்கிறான். விசாரியாமலேகொடு, என்று கட்டளையிடுகிறான்" என்று சந்தேஹித்து, 'இதுஇவ்வாறாக இருக்கவேண்டும்; இவன் யோகநந்தனே; ஸத்தியநந்தனல்ல' என்று நடந்தபடியே ஊஹித்தான். மனதிலும் எண்ணினான். எப்படிவேண்டுமானாலும் இருக்கட்டும்; நந்தனுடைய பிள்ளை சிறுவன்; ராஜ்யமோ அனேக சத்துருக்களோடு கூடினது; வேஷக்காரர்களைக்கொண்டு அறிந்து எல்லா சவங்களையும் கொளுத்திவிடவேண்டும். பிறகு வெகுகாலம் இந்த யோகநந்தன் ஜீவிப்பான்' என்று.

பிறகு சகடாலனுடைய கட்டளையால் தேவாலயத்தில் ரக்ஷிக்கப்படுகின்ற இந்திரதத்தனின் சரீரத்தையும் 'அய்யோ' என்று அலறுகிற வியாடியையும் திரஸ்கரித்து, பலாத்காரமாய் எரிக்கப்பட்டது.

யோகநந்தனுலும் கோடி ஸுவர்ணங்கொடுப்பதில் அடிக்கடி தூண்டப்பட்ட மந்திரி, அரசனைப்பார்த்து, 'ராஜனே இந்த ஸகல ஜனமும் சந்தோஷத்தால் மனக்களிப்பு அடைந்திருக்கின்றது. இந்த பிராம்மணன் முஹுர்த்தநேரம் எதிர்பார்க்கட்டும். இதோ தந்துவிடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டு சிறிது தாமதித்தனர்.

பிறகு க்ஷணநேரத்திலேயே 'அப்பிராம்மண்ணியம், அப்பிராம்மண்ணியம்! யோகாப்யாஸத்திலிருந்த பிராம்மணனை உயிர் துறந்தவன் என்று அநாதப் பிணத்தைப்போல் உமது மஹோத்ஸவத்தில் ராஜபுருஷர்கள் பலாத்காரமாய் எரித்துவிட்டனர்' என்று யோகநந்தனையடைந்து வியாடி புலம்பினன். அதைக்கேட்டுக் கொண்டே, சகடாலன் வாருசியின்பொருட்டு கோடிஸுவர்ணத்தைக்கொடுத்தான்.

(தொடரும்)

K. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

பெண் கல்வி.

இம்மகுடமட்டு மித்திரனில் தொடர்ச்சியாய் 18—1—30லும் அதேமாதம் 25உயிலும் பிப்ரவரி 1லும் பிறகு 22உயிலும் மார்ச் 6லும் ஸ்வாமிஸ்ரீ என். எஸ். ஆச்சார்யார் என்பார் வியாஸம் எழுதியிருக்கின்றார். ஆச்சாரியார் இவ்விஷயம் எழுதஆரம்பித்ததின் காரணத்தை முதலிலேயே காண்பித்திருக்கிறார். அவர் இதைச் சொல்கிறார். முற்காலத்தில் நம்தேசத்துப்பெண்மணிகள் சிறந்த கல்வியைப்பெற்று சீரும் சிறப்புமாக இப்பூமண்டலத்திற்கே மணிவிளக்கெனும்படி விளங்கிவந்தனர் என்று. ஆகவே ஆச்சாரின் அபிப்பிராயம் ஸ்திரீகள் யாவரும் படித்தால்தான் நம் தேசம் முன்னுட்போல் பொங்குமென்பதே. ஆனுல் இக்காலத்தில் பெண்மக்கள் ஆண்மக்கள்போல் சமஉரிமை பெற்றிருக்கவேண்டுமென்றும் அவர்களைப்போல் படிப்பிலும்தேர்ச்சிபெற்றுகவேண்டுமென்றும் யாவருக்குமே புத்தி உதயமாய்விட்டது. சாரதாசட்டம் ஒன்று தலைவிரித்தாட ஆரம்பிக்கும்போதே இனி இந்தியப் பெண்மணிகள் படிக்கக் கிளம்பிவிடுவார்கள். அவர்களுக்குத்

தனிமையாய் உயர்தரக்கலாசாலைகள் வேண்டும். அதில் அவர்களைத் தேர்ச்சிபெறச் செய்யவேண்டுமென்று பரமகருணையுடன் பாதிரிமார்கள் அமெரிக்கா முதலியவிடங்களில் இந்தியாவில் ஸ்திரீகலாசாலைகள் ஸ்தாபிக்க மூலதனம் திரட்டப் பாடுபடுகிறார்களென்பதை தினஸரிப்பத்திரிகை படிப்பவர் யாவருமறிவர். கவர்ன்மெண்டாரிடமும் பெண்கலாசாலைகளுக்கு ஏராளமான கிராண்டு கொடுக்கவேண்டுமென்றும் கலாசாலைகளையும் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் கிராமந்தோறும் ஆண் பெண் இருபாலருக்கும் கட்டாயப்படிப்பை ஏற்படுத்தவேண்டுமென்றும் பலவாறெல்லாம் வாதாடி வருகிறார்கள். நாகரீகத்திற்கேற்ப இப்பவும் நம்பெண்மணிகளில் அநேகர் B.A , B.L , பாஸ்செய்து வக்கீல் வேலைக்கும் வந்துவிட்டனர். அநேகர் டிஸ்டிரிக்ட் போர்டு, தாலுகாபோர்டு முனிஸிபாலிடி முதலியவைகளிலும் மெம்பர்களாகிவருகிறார்களென்றும் பத்திரிகைகளில் பார்த்து அகமகிழ்கிறோம். இவ்விதம் பலவாற்றாலும் பெண்கல்வியால்தான் உலகம் முன்னேறுமென்றகொள்கை யாவருக்குமிருக்கும்போது ஸ்ரீமான் ஆச்சார்யாரவர்களும் விரிந்த வியாஸம் தொடர்ந்து எழுதி அதையே ஸ்திரப்படுத்துகிறாரென்று சொல்வது பொருந்துமென்றாலும் ஆச்சார் இவ்வியாஸம் ஆரம்பித்த நோக்கம் இதொன்றுமட்டுக்குமல்ல. மற்று இப்பெண்கல்வியை ஜனசாமான்யம் ஏற்றுக்கொண்டு தேசாந்தரத்திலும் அதனாலேயே முன்னேற்றமடைவது கண்கூடாய் இருக்கும்போது நம்மவரில் வைதிகர்களென்பார் சிலர். ஸ்திரீகளுக்குப் படிப்புக் கூடாதென்று ஆக்ஷேபிக்கிறார்களென்பதை நம் ஆச்சார் நன்கு தெரிந்துகொண்டு அதற்காக அவர்கள் புத்தியும் இவ்வழியில் திரும்பவேண்டுமென்பதற்காக இவ்வியாஸத்தில் உபநிஷத்மூலமாயும் மற்றும் சாஸ்திரமூலமாயும் அவர்களுக்குப் படிப்பு உண்டென்பதை வற்புறுத்தியிருக்கிறார். ஆகவே அவர்கள் பாடுபட்டிருப்பது வைதிகர்களின் புத்திமதிக்குத்தானாயினும் இங்கும் சிலர் இங்கு ஆசங்கைப்பட அவகாசம் நேருகிறதென்பதைக்காட்டினால் இன்னும் ஓர் சமயம் ஆச்சார் ஐயமற எழுத துணிவாரென்றுகொண்டு அதனை வெளியிடுகிறேன்.

இங்கு ஆச்சார் உபனிஷத்தில் புருஷதேகமான பரமாத்மதேகம் தனித்திருந்ததில் ஆனந்தம் பெறாமல் பிறகு தன் தேகத்தினின்றும் இன்னொரு தேகத்தை உண்டுபண்ணினார். அதுதான்

ஸ்திரீ என்றாயிற்று என்று கூறியிருக்கிறதென்று 1 வது வியாஸத்தில் மிகவிரிவாய்க் கூறுகிறார். இது உண்மைதான். இதையாரும் மறுக்க முன்வரமாட்டார்கள். புருஷன் பாதிசரீரமென்றும் ஸ்திரீ பாதி ஆக முழுசரீரமென்றுதான் வேதசாஸ்திரங்களின் கொள்கை. அதிலும் பரிமளிக்கச்செய்வது பரலோகஸாதனத்திற்கு முக்கிய அங்கமாய் நிற்றல் முதலியன ஸ்திரீக்குத்தான் எற்பட்டது. ஆதல்பற்றியே மனு :

स्त्रियःश्रियश्च गेहेषु न विशेषोऽस्ति कश्चन ।
यत्र नार्यस्तु पूज्यन्ते रमन्ते तत्र देवताः ॥
यत्रैतास्तु न पूज्यन्ते सर्वास्तत्राफलाः क्रियाः ।
जामयो यानि गेहानि शपन्त्यप्रतिपूजिताः ॥
तानि कृत्याहतानीव विनश्यन्ति समन्ततः ।
तस्मादेतास्सदाभ्यर्च्या भूषणाच्छादनाशनैः ॥
भूतिकामैर्नरैर्नित्यं सत्कारेणोत्सवादिषु ।

வீடுகளில் ஸ்திரீ லக்ஷ்மி இருவர்களுக்கும் வித்யாஸமில்லை. எந்தவிடத்தில் ஸ்திரீகள் பூஜிக்கப்படுகின்றனரோ அந்தவிடத்தில் தேவதைகள் சந்தோஷமடைகின்றனர். எங்கு பூஜிக்கப்பெறவில்லையோ அங்கு எல்லா கார்யமும் வீண்தான். வீட்டில் பிறந்த பெண்கள் எந்த வீட்டில் மரியாதை பெறவில்லையோ அங்கு அவர்கள் வருத்தமடைந்தால் அக்குலமழிந்துபோகும். ஆகவே உத்ஸவம் முதலிய காலங்களில் பெண்களை மரியாதை செய்யவேண்டுமென்று கோடி வசனங்களிருக்கின்றன. இதனால் ஆசாருக்கு ஸாதகம்தான். ஆனால் அவர் இதனால் ஸ்திரீகளும் புருஷர்களும் சேர்ந்து கற்றதாய்த்தான் தெரிகிறதென்று முடிக்கிறார். பாதி சரீரம் என்றதனால் பாதியால் ஒன்றும் செய்யமுடியாதாதலால் படிப்பில் ஸ்திரீசரீரமும் சேர்ந்தே இருக்கவேண்டுமென்று ஊஹம் செய்கிறார்போலும் இது அவ்வளவு அழகாகாது. இவ்விதமாயின் அப்போது புருஷர்கள் செய்யும் கார்யம் யாவற்றிலும் அவர்களுக்குஸம்பந்தம் இருந்ததென்றேதீரும். அது பலகார்யங்களில் தடைபெறும். ஆகவே இதனால் கல்விகற்றார்கள் என்று பெண்களுக்குப்பரிந்துபேசுவதற்கு ஆதாவு எற்படவில்லை. இனி அடுத்ததைக் கவனிப்பாம்.

இப்போது ஆச்சார் சரியான உபநிஷத் பிரமாணம் எழுதிவிட்டார். இதனால் ஸ்திரீகள் மற்ற கலைகளில் போல அத்யாத்ம வித்தையும் புருஷர்களுடன் கற்றிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாய் காட்டுகின்றனர். அதற்குப் பிரமாணம் இது.

ஒரு ஸமயம் ஜனங்களிடத்தில் அனேக பெரியோர்கள் தன்யாக விஷயமாய் வந்து குவிர்தனர். அப்போது அவர்களுக்குள் யார் பெரியவர் என்று தெரிந்துகொள்வதற்காக ஏராளமாய்ப் பசுக்களை நன்கு அலங்கரித்து ஸபையில் கொண்டுவந்து கட்டி ஓ மஹரிஷிகளே! உங்களுக்குள் சிரேஷ்டராய் இருப்பவர் இப்பசுக்களை எடுத்துக்கொள்ளட்டும் என்றார். அப்போது ஒவ்வொருவரும் ஒவ்வொருவரது முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது யாக்ஞவல்கியர் இதையறிந்து தனது சிஷ்யர்களை அழைத்து இப்பசுக்களை நமது ஆச்ரமத்திற்கு ஓட்டிப்போங்கள் என்றார். அப்படியே அவர்கள் செய்யவும் அதைக்கண்டு யாவரும் வினயத்துடன் கேழ்வி கேட்டுப் பிறகு பதில் அடைந்து மௌனம் ஸாதித்தபோது வாசக்னவி கார்க்கி என்ற ஒரு ஸ்திரீ ஸபையில் எழுந்து பண்டிதர்களைப்பார்த்து பிராமணர்களே! பெரியோர்களே! இவரை யானிப்பொழுது சரியானபடி இரண்டு கேள்விகளைக்கேட்கின்றேன். அவற்றிற்குத் தக்கவிடையைமட்டுமிவர் கொடுத்துவிடுவாரானால் உங்களுக்குள் எவரும் இவரை பிர்மவாதத்தில் வெல்லமுடியாதென்றாள். உடனே யாக்ஞவல்கியரைப்பார்த்து அம்மாது வெகு ஆடம்பரமாய்ப்பேசிவிட்டு இரண்டு கேள்விகளைக் கேட்கிறாள். இக்கதையை நம் ஆச்சார் தனக்கு ஸாதகமாய் நிற்கின்றதென்றோ, அல்லது தானும் உபநிஷத் அறிந்திருக்கிறேனென்றுகொண்டோ வெகுவிரிவாய் முதல் பத்திரிகையிலும் மறு பத்திரிகையிலும் எழுதிவிட்டார். இருக்கட்டும், அதன் முடிவை ஆசார் சொல்லியிருக்கிறபடி கவனிப்போம். முடிவில் யாக்ஞவல்கியர் அம்மணியின் கேழ்விக்கு சாந்தமாய் பதிலளித்தவுடன் அம்மாள் பிராமணர்களை நோக்கி இவர் மகாப்பெரியார். இவரை பிர்மவாதத்தில் வெல்ல யாவராலும் இயலாதென்று சும்மா இருந்துவிட்டாள் என்று முடித்துவிட்டு ஆச்சார் இதை எழுதுகிறார். நண்பர்களே!' இவ்வுதாஹரணத்தினால் முற்காலத்தியப் பெண்கல்வி எவ்வாறு வெள்ளிடைமலைபோல்விளங்குகின்றதல்லவா என்கிறார். இங்கு நாம் கேட்கிறோம். இதனால் ஸ்திரீ

கள் யாவரும் படித்திருந்தார்களென்பது எவ்விதமேற்படும். இச் சரித்திரம் ஒன்றாலேயே ஸ்திரீகளுக்குப் படிப்பில்லையென்பதை நிலைநிறுத்துகின்றோம். பாருங்கள்! யாக்ஞவல்கியரைக் கேள்வி கேட்ட ரிஷிகள் யாவரும் அடக்கமாய்க் கேட்டு அமர்ந்தனர். ஸ்திரீ ஜாதிக்கு உசிதமில்லாத வித்தையை இவள் வரம்பு மீறித் தெரிந்துகொண்டிருந்ததினால் தான் புருஷர்கள் நிறைந்த ஸபையில் நாணமின்றி எழுந்து ரிஷிகளைப்பார்த்து பெரியோர்களே! இவரை யானிப்பொழுது சரியானபடி இரண்டு கேள்விகளைக் கேட்கின்றேன். அவற்றிற்குத் தக்க விடைமட்டுமிவர் கொடுத்து விடுவாரானால் உங்களுக்குள் எவரும் இவரை பிர்மவாதத்தில் ஒருகாலும் ஜயிக்கப்போகிறதேயில்லை. அப்பொழுது வீண்வாதத்தை முடித்துவிட்டு வந்தவழியே சென்றுவிடலாம் என்று பெரியதனமாய்ப்பேசி நிறுத்தினார் என்று ஆசார் எழுதியிருக்கிறார். இதன்படி இன்னடையிலுள்ள ஒவ்வொரு பதத்தையும் கவனியுங்கள். எவ்வளவு வரம்பற்ற பேச்சுஎன்பது விளங்கும். இம்மாதிரி புருஷர் ஒருவரும் பேசமாட்டார். இம்மட்டா! பிறகு யாக்ஞவல்கியரைப் பார்த்து—

யாக்ஞவல்கியரோ! இந்தக்காசீ தேசத்தின் அல்லது இவ்விதேஹதேசத்தின் அதிபதி வலிய இழுத்துக்கட்டி சத்துருக்களைக் கருவறுக்கும் தன்மையுள்ள கூறிய பாணங்களிரண்டைப்பூட்டிக் கழுத்தில் குறிவைத்து எய்துவிடுவதற்குச் சன்னத்தமாகப் பகைவர் முன் தோன்றுவதுபோல யானும்மை இரண்டு கேள்விகளைக் கொண்டு நெருக்குகின்றேன். நீர் பிர்ம்மவித் என்பது உண்மையானால் அதற்குத் தக்கபடி பதிலைச்சொல்லும் என்று வெகு உக்ரமாய்க்கேட்கலானார் என்கிறார். இவ்வசனத்தின் தடிப்பைப்பாருங்கள். இது ஒன்றே அததற்கு யோக்கியதையற்றவர்களிடத்திலது பொருந்தினால் நியாயமன்று என்பதோடில்லாமல் தானும்கெட்டு உலகைக் கெடுத்துவிடுவானென்ற சாமான்யப்பழமொழியை இவ்வுபனிடதம் வற்புறுத்துவதாய் வெள்ளிடைமலைபோல் தோன்றுவதை விபரீதமாய் நம் ஆச்சார் பிரதிவாதியின் பிரமாணத்தைத் தன்னுடையதென்று ராஜஸபையில் குதித்தவாதிபோல் ஆகிறாரே என்பது ஆச்சரியம்.

अमार्गेणागतां लक्ष्मीं प्राप्येवान्वयवर्जितः ।

நியாயமில்லாமல் பணத்தை ஸம்பாதித்த அயோக்கியன் துன்பப் படுத்துவதுபோல் என்று ஸ்ரீராமர் கூறுவதுபோல் ஸ்திரீகளுக்கு உசிதமில்லாத வித்தையை அடைந்தால் அவர்கள் இவ்விதமாவதோடு இறுதியில் அவமானத்தையுமடைவார்களென்பதைக் காட்டத்தான் இந்த உபநிஷத் கதை வந்ததென்றுதான் ஆன்றோர் கொள்வார்கள். இதை உபநிஷத் வேறோரிடத்தில் இவ்விதம் வெளிப்படையாயும் கூறுகிறது.

இனி யாக்ஞவல்கியருக்கு மைத்ரேயீ என்றும் காத்யாயனீ என்றுமிரு மனைவிகள். அவர்களுள் மைத்ரேயீ பிர்மவாதினியாயானுள். ஆனல் காத்யாயனியோவெனில் ஸ்திரீப்ரக்ஞை உள்ளவள்தான் என்று. இம்மந்திரம் பிருஹதாரண்யகம் 4வது அத்தியாயத்திலுள்ளது. இம்மந்திரம் பிர்மவாதினீ என்றும் ஸ்திரீப்பிரக்ஞை என்றுமிரண்டைக்கூறுகின்றது. இதனுல் ஸ்திரீபுத்தி காத்யாயனீ என்று இயற்கையைக்கூறி மைத்ரேயீகொண்ட புத்தி புருஷபுத்தி என்றும் இது அபூர்வமென்றும் ஆச்சரியப்பட்டே மந்திரம் கூறுகிறது. இனி இதற்கு நம் பாமாசார்யாளுடைய பாஷ்யத்தைப்பார்ப்போம். அங்கு வாக்கியதோரணி இது.

स्त्रीप्रज्ञा स्त्रियां या उचिता सा स्त्रीप्रज्ञा ।
सैवयस्याः प्रज्ञा गृहप्रयोजनान्वेषण लक्षणा ॥

ஸ்திரீப்ரக்ஞை என்றுல் ஸ்திரீயினிடத்தில் எது உசிதமோ அது. அந்த ப்ரக்ஞையுள்ளவள், அதாவது கிருகப்பிரயோஜனத்திற்கு வேண்டுவதைத் தேடுதல் என்று கூறுகின்றுர்கள். ஆகவே ஸ்திரீகள் கிருஹவிஷயகவனமுள்ளவளாய் இருப்பதுதான் உசிதமென்ருயிற்று. பிர்மவாதியென்ருகுதல் ஸ்திரீகளுக்கு எடுத்ததல்லவென்ருய்விட்டது. இவ்விதம் உபநிஷத்தின்படி ஏற்படும்போது நம் ஆச்சாரியார் 2வது வியாஸத்தில் இவ்விதம் கூறுகிருர்.

நண்பர்களே! இவ்வுதாஹரணத்தினுல் முற்காலத்திய பெண் கல்வி எவ்வாறு வளர்ந்தோங்கியிருந்ததென்பது வெள்ளிடைமலைபோல விளங்குகின்றதல்லவா! அத்யாத்மவித்தையைப்பற்றியவரைக்கும் இதை உதாஹரித்தோம். இப்படியே வேதம் உபவேதம், வேதாங்கம் முதலான 32 வித்யாவிஷயங்களிலும் நாட்டியம், கீதம், ஸீவனம், சிசுஸம்ரக்ஷணம் முதலான 64 கலாக்ஞானங்

களிலும் நைபுண்யத்தைவகித்த கன்யாமணிகள் அப்போது வெகுவாயிருந்ததற்கு அநேகம் அத்தாக்ஷி இருக்கின்றது. எனவே முன்னாளில் வித்யாவிஷயத்தில் ஆண் பெண் இருபாலருக்கும் அவசியத்தைப்பற்றியமட்டில் வாசி யெதுவுமே பாராட்டப்பட்டிருக்கவில்லையென்றும் இருதரப்பிற்கும் எல்லாக் கல்வித்துறைகளிலும் தாராளமாய்ச் செல்வதற்குத் தடையெதுவுமிருந்ததில்லை என்றும் ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது— என்று.

நண்பர்களே! நீங்களே கவனியுங்கள். ஆச்சார்யார் காண்பித்த இந்த உதாஹரணம் இவ்வளவுதூரம் இடங்கொடுக்குமா? வெள்ளிடைமலைபோல் என்னும் வாசியெதுவுமே பாராட்டப்பட்டிருக்கவில்லையென்றும் ஆண்பெண் இருபாலருக்கும் அவசியம் என்றும் எல்லாக் கல்வித்துறைகளிலும் இருதரப்பிற்கும் தாராளமாய்ச் செல்வதற்கு தடையெதுவுமில்லையென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரிகிறதென்றும் சப்தாடம்பரத்தால் மட்டிலும் ஆச்சார் பறைசாற்றுவதைத் தவிற வேறொன்றையும் காணவில்லையே, இப்போது ஆச்சார் இதொன்றையாவது கவனிக்கட்டும். ஜனகாது ஸபையில் அனேக பிராம்மணர்கள் நிறைந்திருந்தனரென்றும் அநேகர் யாக்ஞவல்கியரைக் கேழ்விகேட்டனர் என்றும் பிறகு வாசக்னவிகார்க்கி கேட்டனரென்றும் சொன்னதில் அனேகப் படித்த ஸ்திரீகளுமிருந்ததாய் வெளியாகிறதா? ஆண்பெண் இருபாலருக்கும் படிப்புப் பொதுவென்றிருந்தால் இந்த ஸபையில் இன்னொரு ஸ்திரீயாவது வந்திருக்கக்கூடாதா? வந்திருக்கலாமென்றால் அவ்வம்மணி சும்மா இருந்திருப்பாளா? வேறு ஸ்திரீகள்இருந்ததாய் வாக்கியமாவது இடங்கொடுக்கிறதா? ஜனகர் பசுக்களை நிறுத்தி பிராம்மணர்களைப்பார்த்து ஒ பகவர்களே! என்றுமட்டும் கூப்பிட்டனரே தவிர நம்காலத்திய மேதாவிகள் உபந்யாஸமேடையில் ஏறினவுடனே சகோதரர்களே சகோதரிகளே என்றழைப்பதுபோல் பகவர்களே பகவதிகளே என்று கூப்பிட்டாரா? ஒன்றுமில்லை. ஆகவே இந்தக்கதை ஆச்சார்யருக்கு எள்ளளவும் பயன்படாதென்பதுதான் உறுதி.

(தொடரும்)

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.